செ.வெ.எண்:170 நாள்: 30.03.2022

**திருநெல்வேலி மாவட்டம்**

**பொது சுகாதாரத் துறையில் காலியாகவுள்ள பணியிடங்கள் தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்பப்படவுள்ளது. தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வே.விஷ்ணு இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகம், பொது சுகாதார ஆய்வகம், ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியிடமாக உள்ள நுண்ணுயிரியலாளர் (Microbiologist) ஆய்வக நுட்புனர் (Lab Technician) ஆய்வக உதவியாளர் (Lab Attendant) குளிர்பதன கம்மியர் (Refrigeration Mechanic) மருந்தாளுநர் (Pharmacist) பல் மருத்துவ உதவியாளர் (Dental Assistant) துணை செவிலியர் (Auxiliary Nurse Midwifery) பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் (Multi Purpose Hospital Worker) வாகன ஓட்டுநர் (Driver) வாகன துலக்குநர் (Cleaner) மனநல ஆலோசகர் (Psychologist) ஆகிய பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளது. இப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள், கல்வித் தகுதி, ஊதிய விபரம், பணிபுரிய வேண்டிய இடம், விண்ணப்பங்கள் ஆகியவற்றை மாவட்ட தகவல் மைய https://tirunelveli.nic.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், திருநெல்வேலி துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகத்திலும் விண்ணப்பம் பெற்று கொள்ளலாம். விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள்:13.04.2022. என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வே.விஷ்ணு இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

**வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி.**